22nd February 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரண்டையும் இந்த அறிக்கை வந்தபிறகுதான் தெரிந்துகொள்ளவேண்டும்.

The Thoughts of Mao

* 18 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government are aware of the fact that the book entitled "The Thoughts of Mao" is being distributed in Tamil Nadu?

மாவின் சிந்தனைகள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாவின் சிந்தனைகள் என்னும் புத்தகம் தமிழகத்தில் விநியோகிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாவட்டங்களில் இச்சிறு நூல் வழங்கப்பட்டு வருவது பற்றி அரசாங்கத்துக்குத் தகவல் ஏதும் இல்லை. ஆனால் "மவோவின் சிந்தனைகள்" என்னும் சிறு நூலின் சுமார் 25 படிகள் சென்னை மாநகரத்தில் வழங்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, மாவோவும் அவருடைய நாடும் நம் நாட்டுக்கு எதிராகவே இருந்துவருபவை. அத்துடன் நம்மீது யுத்தம் வேறு தொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையை வெளியிடுவது பற்றி என்ன நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் வெளி நாட்டினுடைய புத்தகங்கள் அல்லது அதில் கூறுகிற கருத்துக்களை யெடுத்து வெளியிடுவதற்கு உரிமையிருக்கிறது, அனுமதியிருக்கிறது. அவ்விதம் வெளியிடும் நூல் இந்த நாட்டினுடைய பாதுகாப்பிற்கு, ஒற்றுமைக்கு பாதகம் விளைவிக்கக் கூடியதாக இருந்தால், அப்படிப்பட்ட புத்தகங்களை இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பதற்கும், நடவடிக்கை எடுப்பதற்கும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட எந்த வெளியீடும் மாநிலத்தின் பாதுகாப்புக்கோ ஒற்றுமைக்கோ பாதகம் விளைவிப்பதாக இருந்தால், இந்திய பீனல் கோடு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க மாநில அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட இந்த 'மாவோவின் சிந்தனைகள்' என்ற புத்தகம் என் கைவசம் இருக்கிறது. அது முழுவதையும் நான் படித்துப் பார்த்த வகையில், அதில் இந்தியாவின் ஒற்றுமைக்கு பாதகம் விளைவிக்கும் வகையில் எதுவும் இல்லை. அது முழுவதிலும் அவர்களுடைய கட்சியை எப்படி நடத்தவேண்டும், எப்படிச் செயல்முறை அமைய வேண்டுமென்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, 'துப்பாக்கியிலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறது' என்று மாவோ கட்சியினர் ஒரு போஸ்டர் ஒட்டுகிறார்கள். நாம் பரிபூரண ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆகவே அதை மனதில் கொண்டாவது கவனித்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது. அப்படி ஒட்டியவர்கள் சிக்குவார்களானால் அவர்களைத் தண்டிக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : 'மாவோவின் சிந்தனைகள்' என்ற புத்தகத்துக்கு மத்திய அரசு தடை உத்தரவு விதித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : விவரம் இல்லை.

Representation of the Merchants Association of Chinnamanur.

* 19 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Merchants Association from Chinnamanur of Madurai district has submitted a Memorandum entitled " the real position of middle class merchants in Tamil Nadu " in February—March 1968; and

(*b*) the action taken thereon?

சின்னமானூர் வணிகர்கள் சங்க முறையீடு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்ட சின்னமானூர் வணிகர்கள் சங்கம் 1968 பிப்ரவரி, மார்ச்சில், தமிழகத்தில் நடுத்தர வணிகர்களின் உண்மை நிலை என்று ஒரு Memorandum சமர்ப்பித்ததா ?

(இ) அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே. வணிகர்களின் நிலை பற்றி ஒரு புத்தகம் அழகாக அச்சிட்டு அமைச்சர்களுக்கு அனுப்பியிருப்பதாகவும் அதன் காப்பியை எனக்கு அனுப்பியிருப்பதாகவும் கூறி அனுப்பியிருக்கிறார்கள். அதை ஒருக்கால் புத்தகம் என்று நினைக்காமல் படிக்காமல் விட்டுவிட்டார்களோ என்று நினைக்கிறேன். அதைத் தேடிப் பார்த்துப் படித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அந்தப் புத்தகம் வந்ததாகத் தகவல் இல்லை. ஆனால் கேள்வியில் கேட்டிருக்கிற சின்னமானூர் வணிகர்கள் கழகம் சம்பந்தமாக வருவாய்த் துறை